. REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: சித்திரை 25உ செவ்வாய் (7—5—57) ★ ★ வெளியூர்: சித்திரை 26உ புதன் (8—5—57) இதழ் [281

தேம்ஸ் நதிக்கரையும்-கூவம் நதிக்கரையும்!

★

"ஆளும் கட்சியினர், 'எதிர்க்கட்சியினருக்கு நாங்கள் பேச்சுரிமை கொடுத்ததால்தானே இப்படிப் பேசுகிருர்கள்' என்று கூறுகிருர்கள். அவர்களுக்கு நான் திரு. சத்தியமூர்த்தி அவர்களின் காலத்திய உதாரணம் ஒன்றைக் கூறவிரும்புகிறேன்.

"பிரிட்டிஷ் ஆளுங்கட்சியினர், அன்றையக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. சத்தியமூர்த்தியவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் பேசியதைப்பற்றி, 'உங்களுக்கு பேச்சுரிமை கொடுத்ததனுல் அல்லவா இப்படிப் பேசுகிறீர்கள்?' என்று தேம்ஸ் நதிக்கரையிலிருந்து சொன்

(4-ம் பக்கம் பார்க்க)

'அரசியல் ஜமீன்தார்'களுக்கு விரைவில் இறுதி!

கொள்கை விளக்கமில்லாத கவர்னர் உரையால் பயன் என்ன?

நிலச்சீர்திருத்தம் செய்ய தயக்கமேன்?

வினேபா பாவே திரையாகவா பயன்பட வேண்டும்?

'வடநாடு வளருகிறது-தென்னடு தேய்கிறது' என்பது வெறும் அடுக்குச் சொல் அலங்காரமல்ல!

ஜனநாயக மரபுகளை ஆட்சியாளருக்கு உணர்த்தி சட்டசபையில் அண்ணு ஆய்வுரை

சென்னை, மே. 7—

கவர்னர் பேருரை, சர்க்காரின் கொள்கையைப் பிரகடனம் செய்திருக்க வேண்டும். அந்தக் கொள்கை பற்றிய விமர்சனத்திற்குப் பின்புதான் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும் என்ற ஜனநாயக மரபினை, காங்கிரஸ் ஆட்சியாளருக்கு நமது அண்ணு இடித்துரைத்தார்.

புத்தம் புதிய ஆரோக்கியமான ஜனநாயக சம்பிரதாயங்களை உருவாக்க வேண்டுமென்பதில் அக்கறை கொண்டுள்ள சட்டசபை தி. மு. கழகத்தின் தலைவரான அண்ணு அவர்கள், நேற்று கவர்னர் உரைபற்றிப் பேசுகையில், 'நிதி மந்திரியாயிருப்பவர்கள் செலவினங்களையுடைய இலாகாக்களையும் தம்மிடம் வைத்துக்கொள்வதில்லை' என்ற மேலைநாட்டு ஜனநாயகப் பண்பினையும் ஆட்சியாளருக்கு உணர்த்தினுர்கள்.

நிலச் சீர்திருத்தங்களை ஒரே வரிச் சட்டங்கள்மூலம் கொண்டு வரக்கூடிய ஆற்றல் பெற்றிருந்தும், அவ்வாறு செய்யாமல், ஆட்சியாளர்கள் தயக்கம் காட்டுவது ஏன்? யாருக்காக அவர்கள் பயப்படுகிருர்கள்?—என்ற அண்ணுவின் இடி முழக்கம், இந்த நாட்டு ஏழை விவசாயிகளின் இதயக் குமுறலை எதிரொலித்துக்காட்டிற்று.

'தங்களது தயக்கத்தையும் விருப்பமின்மையையும் மூடி மறைக்கத்தான் ஆட்சியாளர்கள் வினேபா பாவே அவர்களின் சேவையைத் திறமையாகப் பயன்படுத்துகிருர்களா?' என்ருர் அண்ணு!

அண்ணு அவர்கள், 'வடநாடு வாழுகிறது—தென்னுடு தேய்கிறது' என்பது, வெறும் அடுக்குச் சொல் அலங்காரம் அல்ல என்பதை புள்ளிவிவரங்களுடன் விளக்கினுர்கள்.

வெள்ளையரின் ஏகாதிபத்தியப் போக்கு காங்கிரசாரிடம் வளருவது பற்றியும் அண்ணு அவர்கள் எச்சரிக்கை விடுத்தார்கள்.

அவரது கருத்துரை முழுதும் இங்கு தரப்படுகிறது :—

★

"கவர்னர் பெருமானின் உரை பற்றி இங்கு பலதரப்பட்ட கருத்துக்களைக்கொண்டவர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ள இந்த நிலையில், நான், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை எடுத்துக் கூறுவதில் பெருமைப்படுகிறேன்.

"நடைபெறும் விவாதத்தின் போது, ஒரு கட்சியினர் மறு கட்சியினருக்கு நல்லுரைகளையும் அறிவுரைகளையும் வழங்கியதைக் கேட்டோம். ஆனல் அரசியல் கட்சிகளிடை மாலையில் வேற்றுமை தோன்றி காலையில் காதல் அரும்பிவிட முடியாது.

"காதல் பற்றிக்கூட வள்ளுவர், 'காலை அரும்பி பகலெல்லாம் போதாகி மாலை மலரும்இந்நோய்' என்றுதான் கூறியிருக்கிருர். இது அரசியல் உலகிலும் அப்படித்தான்!

"ஒரு கட்சி பற்றி மறுகட்சியிலிருந்து மறுப்புரைகள் அளிக்கப்படுவதை நான் வரவேற்கிறேன். பலதரப்பட்டவர்களின் கருத்துக்களையும் கேட்டு நாங்கள் எங்களைப் பண்படுத்திக்கொள்வோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உடற்பாங்கும் உள்ளப் பாங்கும்!

"எங்கள் கட்சியின் பெயரை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று சிலர் இங்கு கூறினர்.

"இப்படிப்பட்டவர்கள் மட்டுமல்ல—'இவர்கள் அடியோடு அழிந்துபோக வேண்டும்,' என விரும்புபவர்களும் உண்டு. இன்னும் சிலர், 'இவர்கள் எங்களோடு தோளோடு தோள் நின்று ஒத்துழைக்கக்கூடாதா?' என்று கேட்பவர்களும் உண்டு.

"ஆனல், நான் எப்படி கனம் காமராசருடன் தோளோடு தோள் சேரமுடியும்? வேண்டுமானல், கைகோர்த்துக்கொண்டு பணியாற்றலாம். நான் உடற்பாங்கை மட்டுமல்ல—உள்ளப் பாங்கினை வைத்தும்தான் இப்படிக் கூறுகிறேன். அப்படிக் கைகோர்த்துப் பணியாற்றுவதில் இப்பக்கம் இருக்கும் எங்களைவிட, ஆட்சியாளர்களுக்குத்தான் அதிகமான பொறுப்பு உண்டு என்பதை எடுத்துரைக்க விழைகிறேன்.

கவர்னர் பேருரையில் காட்சிகளின் வர்ணனை!

"கவர்னர் பெருமானின் பேருரை, சர்க்காரின் கொள்கை விளக்கங்களை உள்ளடக்கி இருக்கவில்லை; கொள்கை விளக்கங்கள், வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

"கொள்கை விளக்கங்களை அறிவித்து, அவைபற்றி விவாதித்தபின், அவற்றிற்கேற்பப் பல திட்டங்களுக்கும் நிதியைப் பகிர்ந்தளிப்பதுதான் வரவு-செலவுத் திட்டம். ஆனல் கவர்னரின் உரையோ கொள்கை விளக்கம் தரவில்லை; மாருக, நாட்டில் காணப்படும் சில காட்சிகளின் வர்ணனையாகவே அமைந்துள்ளது.

"கவர்னர் தம் உரையில் குறிப்பிட்டுள்ளபடி, 2,000 பொலி காளைகள் தருவிக்கப்படும் என்பதை யாரும் இல்லை என்பதற்கில்லை; அல்லது, 1,25,000 'பம்பு செட்டு'கள் தேவை இல்லை என்றும் நான் கூறவில்லை. ஆனல் இந்தப் பொலி காளைகள், பம்பு செட்டுகள் மூலம் கிராம அபிவிருத்தி எவ்வாறு நடைபெறப் போகிறது என்பதற்கான திட்டம், கொள்கை விளக்கம் அந்தப் பேருரையில் காணப்படவில்லை.

நிதி—நீதி—கல்வி இலாகாக்கள் ஒருவரிடமா?

"இங்கு நமது நிதியமைச்சர் அவர்கள் நிதிக்கும் அமைச்சர்—நீதிக்கும் அமைச்சர்—கல்விக்கும் அமைச்சர்!

"நமது நிதி மந்திரி அவர்களுக்கு உள்ள அபாரமான ஆற்றலுக்கும், அவர்மீது ஆட்சியாளருக்குள்ள நல்ல நம்பிக்கைக்கும் சான்ருக இருக்கலாம், இந்த ஏற்பாடு! ஆனல், செலவினங்களையுடைய இலாகாக்களை நிதியமைச்சர்கள் வைத்துக்கொள்ளாமலிருப்பதுதான், வெளிநாடுகளின் ஜனநாயகப் பண்பு.

பகிர்ந்தளியுங்கள்!

"செலவினங்களுடைய இலாகாக்களை நமது அமைச்சர் வைத்துக் கொண்டிருப்பதினுல், தன்னுடைய இலாகாக்களுக்கு வாரிவாரி வழங்கிவிடுவார் என்பதினுல் அல்ல—மாருக, எங்கே அப்படிச் சிலர் கூறுவார்களோ என்ற எண்ணத்தில், அமைச்சர், தன் கீழ் உள்ள இலாகாக்களைப் பட்டினி போட்டுவிடுவாரோ என்பதினுல்தான், இந்த இலாகா பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று எடுத்துக்கூற விரும்புகிறேன்.

ரசிப்பது யார்?

"அமைச்சரவையை விரிவுபடுத்த வேண்டும் என்று ஒரு உறுப்பினர் யோசனை கூறினுர். இதனை இப்போது அமைச்சரவையினர் ரசிக்காவிட்டாலும், ஆளும் கட்சியினர் ரசித்திருப்பார்கள் என்றே எண்ணுகிறேன். என்றுலும், கனம் நிதியமைச்சரிடம் தரப்பட்டிருக்கும் பொறுப்புகள் அவருடைய திறனுக்கும், என் வாலிபர்களுக்குமே பெருமைதரக் கூடியதாக இருந்தாலும், பொறுப்புகளைப் பிரித்தளிப்பது நல்லது என நான் கூற விழைகின்றேன். அவரிடம் தரப்பட்டுள்ள துறைகள் மூன்றும், மூன்று முறைகளில் நாட்டு மக்களைப் பக்குவப்படுத்துவனவாகும் என்பதை நினைவில்கொள்ள விரும்புகிறேன். எனவே, அவற்றை வெவ்வேறு அமைச்சர்களிடம், பொறுப்பாக விடுவதுதான் சாலச்சிறந்ததாகும்.

எவ்வாறு சாத்தியமாகும்?

"வரவு-செலவுத் திட்டங்கள் கொள்கையின் அடிப்படையில்தான் இருக்க வேண்டும் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டபின், கொள்கைகளைப் பற்றிப் பேசினுல், கொள்கை பற்றி கூறப்படும் கருத்துக்கொப்ப தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை மாற்றியமைப்பது எப்படி சாத்தியமாகும்?

'ஆமாம்' என்கிருர் முதலமைச்சர்

"கொள்கை பற்றிய விளக்கம் கேட்டபோது, முதன்மந்திரி காமராசர் அவர்கள் பதவி ஏற்றபோது, 'கொள்கை விளக்கம் எதற்கு? பழைய கொள்கைகளே தான் நீடிக்கும்' என்று கூறியதாக செய்தி பார்த்தேன்.

(இச்சந்தர்ப்பத்தில் காமராசர் எழுந்து, 'ஆமாம்' என்று கூறினுர்.)

"இப்படி, பழைய கொள்கையையே பின்பற்றப்போவதால்தான், கவர்னர் தம் உரையில் கொள்கை விளக்கம் பற்றிக் குறிப்பிடவில்லையோ என அஞ்சுகிறேன். மேலும், அதனுல்தான் நாங்கள் அரசாங்கத்தின் பழைய கொள்கை பற்றியே பேச வேண்டியிருக்கிறது.

கொடுமைக்கார மாமியார் போல்!

"குறைகூறுவது பற்றி பலர், குறை கூறினுர்கள். ஆனல் கொடுமைக்கார மாமியார், மருமகள் 'போ' என்று சொல்லிவிட்ட பிச்சைக்காரனைக் கூப்பிட்டு, 'அந்த உரிமை உனக்கேது? எனக்கல்லவா?'—என்று கேட்டு, 'பிச்சையா? இல்லை; போ, போ' என்று துரத்தியது போல, ஆளும் கட்சியினர், 'அந்த உரிமை எதிர்க்கட்சியினருக்கு ஏது?' என்று கூறுவதுபோலப் பேசினுர்கள்.

வளருமா? வளர்ந்தால் வேலை குறையுமே!

"ஆளும் கட்சியினரிடை, குறை கூறும் அந்த ஜனநாயகப் பண்பு வளரும் என்று நான் நம்புகிறேன்; அது வளர்ந்தால், எங்களுக்கெல்லாம் வேலை குறையும்.

நாட்டினை மீட்டிட!

"'இப்படியெல்லாம் குறைகளைக் கண்டோம்; எடுத்துக் கூறினேம்; ஆனல், சர்க்கார் கேட்கவில்லை—என்று மக்களிடம் கூறி வாக்குகளைப் பெறுவதற்காகவே இப்படிக் குறை கூறுகிருர்கள்,' என்று சிலர் கூறினுர்கள். நான் அவர்களுக்குச் சொல்லுவேன்—நாங்கள் வாக்குப் பெற்றது, 'நாங்கள் வெற்றி பெற்ருல் உங்களுக்கு அதைச் செய்வோம்; இதைச் செய்வோம்,' என்று அறைகூவல் விடுத்தல்ல! மாருக, தாய்த் திருநாட்டினை மீட்டிடவேண்டும் என்று கூறி ஓட்டுப் பெற்றவர்கள் நாங்கள்!

மறைப்பதற்கு ஒரு திரையாகவா?

"வினேபா அவர்களது பூதான இயக்கம் பற்றி கவர்னரின் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"ஆனல் சர்க்கார் நிலச் சீர்திருத்தம் செய்யப்போகிறேம் என்று பேசிக்கொண்டே காலந்தாழ்த்தி வருகிருர்கள்! "இதனை மறைப்பதற்கு ஒரு திரையாகவே அவர்கள் வினேபாவைப் பயன்படுத்துகிருர்களோ என்று நான் அஞ்கிறேன்!

"இப்போதுள்ள சர்க்கார் பற்றி சிறுகல்லூர் என்ற கிராமத்தில், வினேபா அவர்களே கூறினுர்கள்—

"'நிலச் சட்டம் பற்றி இந்த சர்க்கார் பேசிக்கொண்டே இருக்கிறது; இதனுல், நிலப்பிரபுக்களை ஊக்குவித்து அவர்கள் தங்களுக்கிடையே நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ளவோ, அல்லது விற்றுவிடவோ வழி செய்து தருகிறது சர்க்கார்,'

என்பதாக வினேபா அவர்கள் பேசியிருக்கிருர். அதனுல்தான் சர்க்கார் அவரைத் திரையாகப் பயன்படுத்த நினைக்கிருர்களோ என்று அஞ்சுவதாக நான் கூறினேன்.

யாருக்காக இந்தச் சர்க்கார் பயப்படுகிறது?

"உண்மையில் நிலச் சீர்திருத்தத்தில் சர்க்காருக்கு நம்பிக்கையிருந்தால், அவற்றை உடனடியாகச் சட்டமாக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 7—5—57 செவ்வாய்

மிரட்டல் அல்ல வழி!

★

அரசாங்க நிர்வாக இயந்திரத்தின் அஸ்திவாரமே கிராம அதிகாரிகள் எனலாம்.

அந்த அதிகாரிகள் தங்களது வாழ்க்கையில் நிம்மதியுடன் திருப்தியுற்றிருப்பதைப் பொறுத்தே அவர்கள், தங்கள் பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றுவதும் இருக்க முடியும்.

கிராம அதிகாரிகள் இன்று முழு நேர ஊழியர்களாக உள்ளனர்.

இதர சர்க்கார் ஊழியர்களுக்காவது வேலை நேரம், நாள் ஒன்றுக்கு ஆறு மணி என வரையறுக்கப்பட்டிருக்கிறது, எட்டளவிலேனும்! இந்த எட்டளவு வரையறைகூட கிராம ஊழியர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை; இருபத்திநான்கு மணி நேர ஊழியர்களாகவே அவர்கள் இருந்துவருகின்றனர்.

அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைகள் மிகப் பொறுப்பு வாய்ந்தவை என்பதுடன், அளவுக்கும் அதிகமானவையாகும்.

கிராமத்தில் ஒரு கிராம அதிகாரிதான் கௌரவ நீதிபதி; சுகாதார அதிகாரி; ஜனன மரணக் கணக்குப் பதிவு உத்தியோகஸ்தர்; ரெவினியூ அதிகாரி. பல துறைகளாகப் பிரிந்து இயங்கும் சர்க்கார் நிர்வாக இயந்திரம், கிராமத்திற்கு வரும்போது பல துறைகளும் ஒருவராலேயே நிர்வகிக்கப்படுகிற நிலைக்கு சுருங்கிவிடுவதாக அமைந்துவிட்டிருக்கிறது. இந்த நிலை, 'குருவி தலையில் பனங்காய் வைப்பது'போன்றதாகும். போதாமைக்கு, சர்க்காரின் நிர்வாகத் துறைகள் 1947-ம் ஆண்டுக்குப் பிறகு, நாளும் அதிகரித்தவண்ணமுள்ளன. அப்படி அதிகரிக்கும் ஒவ்வொரு இலாகாவிற்கும் மேல் தட்டில் தனி அதிகாரிகள், பணியாட்கள் நியமிக்கப்படுகின்றனர். ஆனால், கிராம நிலையில் புதிய பொறுப்புகள் அத்தனையும் இந்த உத்தியோகஸ்தர்கள் தலையிலேயே சுமத்தப்பட்டு வருகின்றன. இதனால் கிராம உத்தியோகஸ்தர்கள் இன்று பதில் கூறவேண்டிய—விஷயதானம் தந்து உதவ வேண்டிய, அதிகாரிகளின் எண்ணிக்கை முன்னைவிட மிக அதிகமாகும்; எழுதித் தீர்க்க வேண்டிய பேரேடுகளும், ரிஜிஸ்தர்களும், பதிலிறுக்க வேண்டிய கடிதங்களும் முன்னைவிட எத்தனையோ மடங்கு அதிகமாகும்.

இந்நடைமுறை நிலையை மனதில்கொண்டு கிராம அதிகாரிகளின் சம்பளம், மற்றும் கிராக்கிப்படி உயர்வுக் கோரிக்கைகளைக் கவனித்தால் அவற்றில் உள்ள நியாயம் எளிதில் உணரக்கூடியதாகும்.

பொதுவாக விலைவாசிகள் ஏற்றம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு இவை, வேறெல்லா மக்களையும் பாதித்துள்ள அளவுக்கு, இந்தச் சமுதாயத்தில் சிலர் என்ற வகையில் கிராம ஊழியர்களையும் பாதித்திருக்கிறது. சமுதாயத்தில், ஏழை-எளிய மக்களுக்குள்ள எல்லா வாழ்க்கைப் பிரச்சினைகளும் இவர்களுக்கும் எள்ளளவும் குறையாமல் இருக்கத்தான் செய்கின்றன. இந்த நிலையில் இவர்களுக்கு, இதர மக்களுக்கு இல்லாத அரசாங்கப் பொறுப்புகள் வேறு உள்ளன. இவர்கள், தங்களுக்குத் தந்துள்ள பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்ப்பது உண்மையானால், இவர்களுக்குக் குறைந்தபட்ச வாழ்க்கை வசதிகளேனும் கிடைக்கச் செய்வதில் அலட்சியம் காட்டுவது நியாயமாகாது.

'பத்து ஆண்டுகளுக்கு மேலாக, தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை, கனம் மிக்க சர்க்காருக்கு மேலான பணிவுடன் விண்ணப்பித்தும், எடுத்துரைத்தும், வற்புறுத்தியும் பலன் பிறக்காததினாலேயே நேரடி நடவடிக்கையைப் பற்றி யோசிக்க வேண்டியதாயிற்று' என்று, கிராம அதிகாரிகள் சங்கத்தவர் கூறியிருக்கின்றனர்.

இத்தனை காலம் மிக்கப் பொறுமையுடன் கீழ்ப்படிதலுள்ள ஊழியர்களாகப் பணியாற்றிவரும் இந்தக் கிராம அதிகாரிகளின் கோரிக்கைகளை அனுதாபத்துடன் பரிசீலித்து, முடிந்த அளவேனும் உடனடி நிவாரணம் தரவேண்டிய பொறுப்பிருக்க, கனம் மந்திரி மாணிக்கவேலர் அவர்கள், 'இந்த அதிகாரிகள் வேலையே செய்வதில்லை; மூன்று நான்கு கிராமங்களுக்குச் சேர்த்து ஒரு அதிகாரியை முழுநேர ஊழியர்களாக்கலாம்' என்று யோசனை வெளியிடுவது கண்டிக்கத்தக்கதாகும்.

வேறெல்லா வழிகளும் தூர்ந்துபோன பின், நேரடி நடவடிக்கை என்ற எஞ்சியுள்ள ஒரேவழியை அவர்கள் நாடுகிற நேரத்தில், சர்க்கார் அவர்களை மிரட்டுவதும் அழகல்ல!

ஏற்கனவே அதிருப்தியடைந்துள்ள நிலையில், இந்த அதிகாரிகளில் பெரும்பாலானோர், அதிகமான வேலை நெருக்கடிகளிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்வதற்காக புள்ளி விவரங்கள் சேகரித்தல் போன்ற வேலைகளை ஏனோதானோ என்று செய்துவருவதாகப் புகார் ஒன்று பரவலாக இருந்துவருகிறது. இது போதாது என்று, சர்க்கார் இன்னும் அவர்களை அவதிப்படவிடுமானால், எஞ்சியுள்ள பொறுப்புகளிலும் அவர்கள் உரிய சிரத்தை காட்டாமல் போகக்கூடும்.

இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்து, சர்க்கார், இந்த உத்தியோகஸ்தர்களின் நியாயமான கோரிக்கைகளைப் படிப்படியாகவேனும் ஈடேற்ற முன்வருவதின் மூலம்தான், அவர்கள் உத்தேசித்திருக்கிற நேரடி நடவடிக்கையைத் தவிர்க்க முடியும் என்று கருதுகிறோம்.

'மிரட்டிப் பணியவைப்பது நெடுநாளைக்கு நடக்காது; நல்லதுமல்ல என்பதை, சர்க்கார் உணர வேண்டும் வெகு விரைவில்!

இயற்கைக்கும் உண்மைக்கும் மாருக ஓவியம் வரைவதுதான் நவீனக் கலையா?

இந்தியப் பேரரசின் உள்ளக்கிடக்கை இதை உணர்த்துவதாகாதா?

ரவிவர்மா ஓவியக் கலை: பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் புகழ்மாலை

அறிவியல் கலை—உணர்ச்சிக் கலை உணர்வு பற்றி விளக்கம்

2—5—57 மாலை **6-30** மணிக்கு சென்னை ரவிவர்மா கலைக் கழகச் சார்பில் நடைபெற்ற இராசா ரவி வர்மா **109**-வது பிறந்த தின விழாப் பொதுக்கூட்டத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய கருத்துரையின் சுருக்கம் இங்கு தரப்பட்டிருக்கிறது :—

"ஓவியக் கலையை உலகத்திலே இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள். ஒன்று—கிழக்கத்திய ஓவியக் கலை; மற்றொன்று—மேற்கத்திய ஓவியக் கலை. இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளின் ஓவியங்கள் கிழக்கத்திய ஓவியக் கலையில் சேர்க்கப்படுகின்றன.

"அதேபோல, இந்திய நாட்டின் ஓவியக் கலையை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்; ஒன்று—வட இந்திய ஓவியக் கலை. மற்றொன்று தென்னகத்து ஓவியக் கலை. தென்னாட்டில்தான் மொழி — நாகரிகம்—பண்பாடு— ஓவியம் — சிற்பம் முதலியன வளர்ந்து சிறப்பாக இருக்கின்றன.

"அம்மாதிரி, தென்னாட்டு ஓவியக் கலைக்குப் பெயரும் புகழும் தேடித்தந்தவர்களில் ஒருவர்தான் இராசா ரவி வர்மா. அவர் அரச குலத்தில் பிறந்தவர் என்றாலும், ஓவியத்திலும் அரசராகவே இருந்தார்.

"அவர் தன்னுடைய ஓவியங்களில் கடவுள்களைப் பற்றியே அதிகமாக வரைந்திருந்தாலும், அதையும் மிக அழகாக எழுதியதால்தான் மக்கள் அதை ரசிக்க முடிந்தது. அவரே இல்லாவிட்டால், சரஸ்வதி, இலட்சுமி போன்ற கடவுள்களை மக்கள் காணமாட்டார்கள். அந்தக் கடவுள்கள் எல்லாம் உண்மையில் இருந்தால், ஒரு மாநாட்டினை அவர்களே கூட்டி நன்றி தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றி, நேரிலேயும் வந்து நன்றி செலுத்திக் கொள்வார்கள்.

"ரவி வர்மா, முழுக்க முழுக்க கடவுள்களையே வரையவில்லை; மக்களின் வாழ்க்கைக் காட்சிகளையும் ஓவியமாக எழுதியிருக்கிறார். ஆனால், அவைகளை எல்லாம் மைசூர், திருவனந்தபுரம் போன்ற கண்காட்சிசாலைகளில் வைத்திருக்கிறார்கள்; அதை அச்சடித்து வெளிவராத நிலையில் வைத்திருக்கிறார்கள்.

"அவர் எழுதிய மக்களின் வாழ்க்கைக் காட்சி ஓவியங்கள் எல்லாம் உள்ளது உள்ளபடியே எழுதியவைகளேயாகும்.

கலையை இரு கூறுகளாகப் பிரிக்கிறார்கள். ஒரு கூறு—அறிவியல் கலை; மற்றொன்று, உணர்ச்சிக் கலை.

"அறிவியல் கலை என்பது, இருக்கின்ற உண்மையை, அப்படியே அறிந்துகொள்வது—அதாவது, உலகத்திற்கும் சூரியனுக்கும் உள்ள தூரம், சந்திரனுக்கும் உலகிற்கும் உள்ள தூரம், பூமியின் சுற்றளவு இவைகளைக் கேட்டால், அதற்குக் கிடைக்கும் விடைதான் அறிவியல் கலை. இதைப்போன்ற மற்ற எல்லா அறிவு வயப்பட்டதை எல்லாம் அறிவியல் கலை எனப் பிரிக்கிறார்கள்.

"உணர்ச்சி கலை என்பது, கலை உணர்வைக் குறிப்பிடும்—அதாவது, சூரியன் எழுந்தான் என்பதை, 'கதிரவன் செங்கதிர் எழுப்பி நீலக்கடலில் இருந்து வெளிவந்தான்,' என்று வர்ணிப்போடு சொல்லுவதை, 'கலை உணர்வு' என்கிறார்கள்.

"இந்த இரு பெரும் பிரிவுகளில், உணர்ச்சிக் கலையைச் சேர்ந்த ஓவியக் கலையை, உள்ளது உள்ளபடியாக—இயற்கைக்குச் சிறிதுகூட மாறுமல், கலை உணர்வோடு இராசா ரவிவர்மா அவர்கள் வரைந்த ஓவியங்களையும் நண்பர் வைத்தியநாதன் வரைந்த ஓவியங்களையும், ஒரு புறமாகவும், இந்திய சர்க்காரின் ஆதரவில் பரிசு பெற்றதும் பாராட்டுதல்களைப் பெற்ற ஓவியங்களை மற்றொரு புறமாகவும் காட்சிச்சாலையில் வைத்திருக்கிறார்கள்; அதை நீங்கள் பார்த்தால் எந்த ஓவியம் சிறந்தது என்பதை கண்டறிய முடியும்.

"இவ்வாறு உள்ளது உள்ளபடி ஓவியம் தீட்டிய ரவிவர்மா, இந்திய அரசாங்கத்தாரால் எப்படிக் கருதப்படுகிறார் என்றால், 'ரவி வர்மா, பெயரோ—புகழோ பெற்றவர் அல்ல வங்காள ஓவியர்களிடம்,' என்று கருதப்படுகிறார்—1951-ல் இந்தியப் பேரரசின் ஆதரவில் வெளியிடப்பட்ட 'Indian Art Through Ages' என்ற நூலில்!

"உலகத்தில் எந்த நாட்டிலும்—எந்தக் காலத்திலும்—இன்றும் சரி, எதைச் சிறந்த ஓவியமென்பார்கள் என்றால், உள்ளது உள்ளபடி கலையுணர்வோடு வரையப்பட்ட ஓவியத்தைத்தான் சிறந்த ஓவியம்—சிறந்த கலை என்பார்கள்; இதைத்தான் இராசா ரவிவர்மா எழுதியிருக்கிறார்.

"ஆனால், உண்மைக்கு மாறுக—கலையுணர்வின் அத்துமீறி—உடலுறுப்புகளின் அளவை இயற்கைக்கு மாறுக எழுதியிருப்பதுதான் 'நவீனக் கலை'யாம், இந்தியப் பேரரசிற்கு!

"'ஊக்கத்தைக் கைவிடாதே,' என்று சொற்களால் சொல்லுவதை கலைஞன், 'ஊக்கமது கைவிடல்,' என்று எழுதுகிறான். 'ஊக்கம் கைவிடேல்,' என்றாலே, 'ஊக்கத்தைக் கைவிடாதே,' என்றுதான் பொருள். ஊக்கமது என்ற தொடரில் 'அது' என்பதற்குப் பொருளில்லை; ஆனால், 'அது' என்ற அந்த வார்த்தைத்தான் கலை!

"நிழற் படங்களில் நாம் படம் பிடித்தால் அதில் இருப்பதை இருப்பதாகத்தான் காட்டும்; ஆனால், அம்மாதிரிக் காட்சியை ஓவியன் ஒருவன் ஓவியமாக வரைகிறான் என்றால், அந்தப் படத்தில் எது எது இருக்க வேண்டுமோ, அதைக் கொண்டுவந்து வைப்பான்; எது எது இருக்க வேண்டும் என்பதை அறிந்து கலை உணர்வோடு வரைவான். அதன்றி, கற்பனைத் திறன் என்று கூறி, 'இயற்கைக்கு மாறுக வரையும் ஓவியம்தான் நவீனக் கலை' என்று சொல்லுகிறார்கள்.

"ஓவியம் மக்களுக்கு மகிழ்ச்சியையும் ஊட்டும்; உணர்ச்சியையும் எழுப்பும்; எழுச்சியையும் தோற்றுவிக்கும்.

"எனவே, ஓவியத்தின் அவசியத்தை— இன்றியமையாமையை மக்கள் உணர்தல் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"தமிழகம், ஓவியத்தை மிக மிகச் சிறப்பாக வளர்த்து வந்தது என்பதை சங்க இலக்கியங்களில் காணலாம். சங்கக் காலத்தில் ஓவியக் கூடங்கள் வைத்து ஓவியங்கள் வரைந்திருக்கிறார்கள்; மணிமேகலை காலத்தில் நடனமாதர்கள் ஓவியம் பயின்றிருக்கிறார்கள் என்று இருக்கிறது. நடனப் பயிற்சி அளிக்க ஓவியத்தின்மூலம் நடனத்தை உணர்த்தியிருக்கின்றார்கள் என்பதற்குச் சான்றாக சங்க இலக்கியப் பாடல்கள் இருக்கின்றன.

"இந்த நாட்டு ஓவியக் கலை, இந்த நாட்டுக்கு மட்டும் சொந்தமாக இருக்கவில்லை. இந்த நாட்டுக் கலை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் வரை தென்னகத்தின் சாயலோடு கூடிய ஓவியங்களாகத்தான் இருக்கின்றன; அங்கு வடநாட்டின் சாயல் கிடையாது.

"இராசா ரவி வர்மாவின் கலை முழுக்க முழுக்க தென்னகத்தின் சாயலைத்தான் கொண்டிருக்கிறது."

ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம்

சர்க்கார் கொள்கை பற்றி சட்ட சபையில் கேள்வி

சென்னை, மே. 4—

"தொழிற் சங்கங்களை தொழிலாளர்களே நடத்த வேண்டும் என்றும், அரசியல் கட்சியினர் தொழிலாளர் சங்கங்களை தங்கள் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்வதைத் தடை செய்தும் சட்டம் கொண்டு வரப்படுமா?"

என்று நமது எம்.எல்.ஏ.-தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் நேற்று சட்டசபையில் ஒரு கேள்வி கேட்டார்.

இதற்கு பதிலளித்த தொழில் மந்திரி ஆர். வெங்கட்ராமன் அவர்கள், 'தொழிற்சங்க நிர்வாகக் கமிட்டிகளில் 50 சதவிகிதத்தினர்வரை வெளியார் இருக்கலாம் என தொழிற் சங்கச் சட்டம் இருக்கிறது; இதனை மாற்றினாலன்றி, உறுப்பினர் கோருகிறபடி சட்டம் கொண்டுவருவதற்கில்லை—இந்த நிலையை மாற்றுவதற்கில்லை,' என்றும் கூறினார்.

"தொழிற் சங்கங்களை அங்கீகாரம் செய்வது சம்பந்தமாக, தொழிலாளர் ஆலோசனை போர்டிடம் சர்க்கார் ஏதாவது மசோதா சமர்ப்பித்துள்ளனரா? அப்படியானால் அந்த மசோதா எப்போது சபைக்கு வரும்?"

என்று கல்யாணசுந்தரம் கேட்ட பிரதான கேள்விக்கு, மந்திரி, மசோதா தரப்பட்டிருக்கிறது என்றும் சட்டம் கொண்டுவருவது பற்றி பரிசீலிக்கப் படுகிறது என்றும் பதிலளித்தார்.

"ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் அமைப்பு பற்றி எழுந்த கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் மந்திரி வெங்கட்ராமன், 'ஒரு தொழிலுக்கு ஒரே தொழிற் சங்கம் என்று நாம் சட்டம் இயற்றுவது முடியாது; அது அரசியல் சட்டத்திற்கு விரோதமானதாகும்,' என்று கூறினார்.

நமது தோழர் எம்.பி. சுப்பிரமணியம் அவர்கள் 'ஒரு விஷயம் பரிசீலனையிலிருக்கும்போது ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் மட்டுமே இருக்கக்கூடாது என்ற தன் கருத்தை அமைச்சர் தெரிவிக்கலாமா?' என்று கேட்டபோது, மந்திரி, தாம் அவ்விதக் கருத்தை அறிவிக்கவில்லை என்று கூறினார்.

வெண்ணெய் திரளச் செய்வது வேலைக்காரி— நெய்யாக்கி வைத்துக்கொள்வது எசமானி!

எதிர்க் கட்சிகள் உருவாக்கும் சக்தியை ஆளும் கட்சியினர் உரிமையாக்கிக் கொள்ளும் விந்தை?

அரும்பியவுடன் கிடைக்காத மணம் நாளடைவில் கிடைத்தே தீரும்

பேராசிரியர் க. அன்பழகன் கருத்துரை

4—5—57 மாலை 6½ மணிக்கு சென்னை—பெரியமெட்டு தி. மு. கழகச் சார்பில், பெரியமெட்டு—ஸ்டிங்கர்ஸ் தெருவில், பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்குப் பாராட்டுப் பொதுக்கூட்டம், தோழர் நல்லத்தம்பி முன்மொழிய, தோழர் நல்லமுத்து வழிமொழிய தோழர் ஆ. வீரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தனது தலைமையுரையில், கழகத் தோழர்கள் மக்களுக்கு நல்லமுறையில் பணியாற்றி வருகிறார்களென்றும், அதைப்போல பணியாற்ற முடியாத மாற்றார்தான் நம்மீது கேலியும்—கிண்டலும் வீசுகிறார்களென்றும், அது அரசியல் கண்ணியமன்று என்றும் அறிவுறுத்தினர்.

அடுத்துப் பேசிய தோழர் வி. எஸ். கோவிந்தராசன் அவர்கள், தி. மு. கழக வெற்றிக்கு இளைஞர்களின் முயற்சியும்—பெரும் உழைப்பும்—சிறந்த ஆற்றலும் தான் துணை நின்றதென்றும், வெற்றி பெற்ற தோழர்கள் அரசியலுக்கோ—மக்களுக்கோ புதியவர்கள் அல்லவென்பதை விளக்கியும், வெற்றிக்காகப் பாடுபடுவது ஒவ்வொரு கட்சியிலிருக்கும் தொண்டர்களுக்கும் கடமையென்றும், ஆனால் மாற்றுக் கட்சியின் வெற்றிக்குப் பாடுபடுவதாக கூறிக்கொண்ட அந்தக் கட்சியின் தொண்டர்கள் நம் மீது சொந்த விருப்பு—வெறுப்பு வைத்துக்கொண்டு தான் எதிர்த்தார்கள் என்பதையும், தேர்தலுக்குப் பின் தி. மு. கழகம் அழுந்திவிடும் என்று அரசியல் அவசர ஆருடக்காரர்கள் கணித்தார்கள் என்றும், ஆனால் அது பொய்த்துவிட்டது என்பதை விளக்கியும், கழகம் சட்டமன்றத்தில் நல்ல ஒரு சனநாயக எதிர்க்கட்சியாகப் பணியாற்றும் என்பதை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

அடுத்து, நன்றியுரையாற்றிய பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், தான் பொதுத் தொண்டில் ஈடுபடத் தயாராக இருந்ததாயும், ஆனால், தான் ஆற்றும் தொண்டை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற ஐயம் இருந்ததென்றும், தனது தொண்டைஏற்றுக்கொண்டதை இத்தேர்தல் மூலம் உறுதிப்படுத்திவிட்டதற்கு நன்றிகூறி, நல்ல அரசியல் விளக்கமளித்து உரை ஆற்றினர்.

இறுதியாகத் தோழர் மு. கருணாநிதி அவர்கள், காங்கிரசின் வெற்றியும்—தி. மு. கழகத்தின் வெற்றியும் எத்தன்மையது என்பதையும், நமக்கு இருந்த எதிர்ப்புகளின் தரத்தையும், இந்த 5 ஆண்டுகளில் தாயக விடுதலைக்காக 5—6 தடவை சிறை செல்ல நேரிடலாம் என்றும், கழகத்தின் பணிகளுக்கு மக்களின் பேராதரவு இப்பொழுதுள்ளதுபோல் எப்பொழுதும் தருவதோடு, இன்னும் ஆதரவு திரட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அன்பழகன் அவர்களைப் பாராட்டி உரையாற்றினர். தோழர் கன்னியப்பன் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்தில் அன்பழகன் அவர்கள் ஒரு பெண் குழந்தைக்கு 'கருணாநிதி' என்றும், தோழர் கருணாநிதி அவர்களால் ஒரு பெண் குழந்தைக்கு 'அன்பழகி' என்றும் பெயரிடப்பட்டது.

இவ்வட்ட தி. மு. கழகச் சார்பில் தலைவர்களுக்கு கைத்தறித் துண்டும் அணிவிக்கப்பட்டன.

★

க. அன்பழகன் பேச்சு

"இளைத்தக் கட்சிக்கு அதிக சலுகைகாட்ட வேண்டுமென்று அண்ணா அவர்கள் சட்டமன்றத் தலைவரைப் பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் அப்படி குறிப்பிட்டது, நாம் சட்டமன்றத்திலே மட்டும்தான் இளைத்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார். உள்ளே மட்டும்தான் நாம் இளைத்திருக்கிறோம் — வெளியே நமக்கு மக்கள் பெருவாரியாக ஆதரவு தருகிறார்கள்.

"உள்ளே நாம் 15 பேர்கள் தான் என்றாலும், வெளியே நமக்கு 17 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். இந்த உண்மையை காங்கிரசுக்காரர்கள் எண்ணத்தக்கவகையில் வெளியிலுள்ள கழகத் தோழர்கள் பணியாற்ற வேண்டும்.

"நாம் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியாக இருப்பதை — நாம் கூறும் கருத்துக்களை அவர்கள் உணரும் வகையில், கழகத் தோழர்கள் கடமையாற்ற முற்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"உங்கள் ஆதரவு ஒரு நல்ல எதிர்க்கட்சிக்குச் சேரவேண்டும்; அப்படி ஒரு நல்ல எதிர்க்கட்சியாக இயங்கக்கூடியது திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை உணருமாறு மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

"சில்லறைக் கட்சிகளை மக்கள் ஆதரித்துக் கொண்டிருந்தால், நாட்டில் நல்ல அரசியல் சூழ்நிலை அமைய வெகுகாலமாகிவிடும்; நாம் கருதுகிற இலட்சியத்தை, மக்கள் தருகிற ஆதரவைப் பொறுத்து வெகுவிரைவில் திராவிடம் அமையக்கூடும்.

"சட்டசபையில் நமது தோழர்கள் தென்னகத்தின் நிலையை எடுத்துக்காட்டி வருகிறார்கள்; இன்னும் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் எடுத்துரைப்பார்கள். மக்கள் அவ்வப்போது ஆதரவும்—ஒத்துழைப்பும் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்குக் காரணம் பாட்டாளிகள் — தொழிலாளர்கள் — தாய்மார்கள் அனைவரும் கொடுத்த ஒத்துழைப்பும்—ஆதரவும்தான்.

"இதுவரை நாங்கள் வெளியிலிருந்து எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு கருத்துக்களைச் சொல்லி வந்தோம்; இப்பொழுதுசட்டசபைக்கு நாங்களே சென்றிருப்பதால் நமது கருத்துக்களை—பேச்சை—மொழியை காங்கிரசுக்காரர்களுக்கு உணர வைக்கமுடியும்.

"காங்கிரசுக்காரர்கள் சட்டசபைக்குப் போனார்கள்—இருந்த இடத்தைவிட மனமில்லாததால்; தாங்களே ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்ற எண்ணத்தால்; சொந்த இலாபம் கருதியும் சட்டமன்றம் சென்றிருக்கிறார்கள்.

"ஆனால், நம்மைப் பொறுத்த வரையில், சட்டசபைக்குச் சென்றது காங்கிரசாருக்கு வெளியே சொன்ன மறுப்பை—அவர்களின் எதேச்சாதிகாரத்திற்குக் காட்டிய எதிர்ப்பை—அவர்கள் செய்துகொண்டுவந்த தவறுகளை வெளியேயிருந்து எடுத்துக் காட்டியதை, உள்ளேயும் சொல்வதற்கும் — எடுத்துக்காட்டுவதற்கும்தான் சென்றிருக்கிறோம்; சட்டசபையில் ஜனநாயகத்தை விளக்கவும், எதிர்க்கட்சியின் கருத்துக்களுக்கு ஆளுங்கட்சியார் செவி சாய்க்கும்படி செய்யவும் தான் சென்றிருக்கிறோம்.

"நாங்கள் சட்டமன்றத்தில் எந்த அளவுக்குப் பாடுபட்டாலும்—முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி ஆணித்தரமாகக் கேட்டாலும் உடனடியாக வெற்றி கிடைக்காது; ஏனென்றால் ஆளுங்கட்சியில் கைதூக்க ஆட்கள் நிறைய இருக்கிறார்கள்; நாங்கள் மிகக் குறைவாகத்தான் இருக்கிறோம்.

"இப்பொழுததான் சட்டமன்றத்தில் அரும்பியிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்; இந்த 5 ஆண்டுகளில் மக்கள் தரும் ஆதரவால், கழகம் பூத்துக் குலுங்கி, கனியாகி, பின்னர் 'திராவிட நாடு' என்ற இலட்சியப் பயனை தரத்தான்போகிறது.

"அரும்பிய உடனே மணம் கிடைக்காத காரணத்தால், எப்பொழுதும் மணமே வராது என்பதல்ல; நாளடைவில் பலன் கிட்டும்.

"எப்பொழுதும் எதிர்க்கட்சியால் கிடைக்கும் பலன்களெல்லாம் மறைமுகமானதாகத்தான் இருக்கும். காரணம், மக்கள் மத்தியிலே ஒரு நல்ல திட்டத்தைச் சொல்லும்போது அதற்கு மக்கள் ஆதரவு தர ஆரம்பித்துவிட்டார்கள் என்று தெரிந்து, பின் ஆளுங்கட்சியார் செய்துவிட்டு, 'நாங்கள் முன்னமேயே எண்ணியிருந்தோம் இத்திட்டத்தை; இப்பொழுது செய்துவிட்டோம்' என்று கூறுவார்கள். எடுத்துக் காட்டாக வேண்டுமானால், ஆச்சாரியார் புதுக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தபோது, நாம் பலமாக எதிர்த்தோம்; நாட்டின் நல்லவர்களெல்லாம் எதிர்த்தார்கள்; மாற்றுக் கட்சிகள் அனைத்தாலும் எதிர்க்கப்பட்டு, பின்னர் அதை ஒழித்து, நல்ல பெயரைப் பெற்றார் காமராசர்! ஆனால், அதற்குக் காரணம், எதிர்க் கட்சிகள்தான்!

"மோர் கடைகிற வரையில்—வெண்ணெய் திரளுகிற வரையில் வேலைக்காரி செய்வாள்; வெண்ணெயை நெய்யாக்கி வைத்துக் கொள்ளுகிறவள் எசமானியாக இருப்பாள். அதைப்போல, காங்கிரசை, நாட்டுக்குச் செய்ய வேண்டிய நல்ல காரியங்களை செய்யும்படி வாதாடுவது எதிர்க்கட்சி; ஆனால், அதை செய்துவிட்டு, 'நாங்கள்தான் செய்தோம்' என்று சொல்லுவார்கள் காங்கிரசார். ஆனால், அதைச் செய்யத் தூண்டியது எதிர்க்கட்சி என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு அதிகாரம் மட்டுமே துணை நின்றது—நிற்கிறது. எதிர்க்கட்சி இருப்பதால்தான் அவர்கள் நல்ல திட்டங்களைச் செய்தார்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

மேலும், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், தனக்கு வாக்கு அளித்த வாக்காளர்களுக்கும், ஆதரவளித்த ஆதரவாளர்களுக்கும், உழைத்த கழகத் தோழர்களுக்கும் நன்றிகூறி உரையாற்றினர்.

உழைப்பை நல்கி உருக்குலைந்தோர் உதைத்துத் தள்ளப்படும் கொடுமை

மனிதனாக வாழும் வாய்ப்புப் பறிக்கப்பட்டு வேதனையில் ஆழ்த்தப்படுகின்றனர்

எட்டு இலட்சம் மலைநாட்டுத் தமிழர் உரிமையுடன் வாழ உழைப்பதற்குப் போராடுவோம்

இலங்கையில் டி. கே. சீனிவாசன் முழக்கம்

"வெறும் மேடாகவும் காடுகள் நிறைந்துமிருந்த இலங்கையைப் பொன் கொழிக்கும் நாடாக்கியவர்கள் மலைநாட்டுத் தமிழர்கள்; தமது உழைப்பை நல்கி இந்நாட்டு வளத்தைப் பெருக்கித் தந்தவர்கள் மலைநாட்டுத் தமிழர்கள்.

"உழைத்து உழைத்து உருக்குலையும் அவர்கள், இன்று இங்கே உதைத்துத் தள்ளப்படுகிறார்கள்; உரிமை மறுக்கப்படுகிறார்கள்; கேவலமாக மதிக்கப்படுகிறார்கள்; மனிதனாக வாழும் வாய்ப்புப் பறிக்கப்பட்டு வேதனையில் ஆழ்த்தப்பட்டு வருகிறார்கள்.

"இந்த நிலையை மாற்றி யமைத்து மலைநாட்டுத் தமிழர்களுக்குப் புனர்வாழ்வளிக்கத் திராவிட முன்னேற்றக்கழகம் பாடுபடும்.

"நாளைக்கு என்ன ஆகுமோ என்ற கவலையோடு—உரிமையிழந்த அரசியல் அனாதைகளாக — அடிமை வாழ்வில் கிடந்துழலும் 8-இலட்சம் மலைநாட்டுத் தமிழருக்கு விடுதலை பெற்றுத் தந்து — புனர்வாழ்வளிக்க உள்ளன்போடு முன்வரும் அரசியல் கட்சிக்கு—அதன் போராட்டங்களுக்குப் பரிபூரண ஆதரவு தந்து தோளோடு தோள் நின்று உழைக்க இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது; தென்னாட்டுத் திராவிட முன்னேற்றக் கழகமும் அவசியம் ஏற்பட்டால் தன்னாலான துணையைச் செய்யத் தயங்கப்போவதில்லை,"

என்று, தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், இலங்கை தி. மு. கழகச் சார்பில், கொழும்பு-நாராயண குரு மண்டபத்தில் 28-4-57-ல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் முழக்கமிட்டிருக்கிறார்.

அண்ணா அவர்களுக்கு வரவேற்பு அளிக்க கீரப்பாளையம் ஊராட்சி மன்ற முடிவு

புவனகிரி, மே 4—

புவனகிரி — கீரப்பாளையம் ஊராட்சி மன்றம், திரு. ஏ. கே. இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, விரைவில் துவங்கப்படவிருக்கும் வானொலி நிலயத்தைத் திறந்து வைக்கும்படி அண்ணா அவர்களைக் கோரி ஒரு தீர்மானமும், அண்ணா அவர்களுக்கு வரவேற்பு இதழ் வாசித்துக் கொடுப்பதென ஒரு தீர்மானமும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில், அண்மையில் காலஞ்சென்ற டாக்டர் அழகப்ப செட்டியார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், ஊராட்சி மன்றப் படிப்பகத்திற்கு, 'ஹோம் லண்ட்', 'சண்டே அப்சர்வர்' என்ற இரு ஆங்கில ஏடுகளை வாங்கவும் முடிவெடுக்கப்பட்டது.

(ந. நி.)

உட்காருங்கள்!

கடந்த வெள்ளியன்று சட்டசபையில் கவர்னர் உரை மீது நடைபெற்ற விவாதத்தின்போது தி. மு. கழக சட்டசபைக் கட்சிச் செயலாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி பேசிக்கொண்டிருந்தார். ஐந்தாண்டுத் திட்டம் பற்றி அவர் பேசுகையில், நிதி மந்திரி சுப்பிரமணியம் இரண்டொரு முறை குறுக்கிட்டு ஏதோ முணுமுணுத்தார். உடனே தோழர் கோவிந்தசாமி அவர்கள், 'கனம் மந்திரி அவர்கள் ஏதாவது பேச விரும்பினால், விவாதத்திற்கு பதிலளிக்கையில் பேசிக்கொள்ளலாம்; நான் பேசும்போது குறுக்கிடவேண்டாம்,' என்று சபைத் தலைவரிடம் கூற, சபைத் தலைவர், மந்திரியை நோக்கி, சைகையால் 'உட்காருங்கள்,' என்றார். மந்திரியும் வாயை மூடிக்கொண்டார்!

குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டோர்

ஒரு புள்ளி விவரம்

நிர்வாக இலாகாவிலிருந்து நீதி இலாகா பிரிக்கப்பட்ட 1955-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் மொத்தம் 5,81,246 பேர் பல்வேறு குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டிருக்கின்றனராம்.

இவர்களில் 63 பேர்களுக்குத் தூக்குத் தண்டனையும், 237 பேர்களுக்கு ஆயுள் தண்டனையும், 83,619 பேர்களுக்கு சிறைவாசத் தண்டனையும், 3 பேருக்குக் கசை அடித் தண்டனையும், 4,369 பேர்களுக்கு நன்னடத்தை ஜாமீன் தண்டனையும் 4,71,872 பேர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது.

அபராதம் விதிக்கப்பட்டவர்களில் 83 பேர் ரூ. 1000-க்கும் அதிகமாகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அபராதங்கள் மூலம் மொத்தம் ரூ. 43,37,987 கிடைத்ததில் ரூ. 1,24,857 சம்பந்தப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடாக வழங்கப்பட்டது.

ராஜ்ய குற்றங்களின் எண்ணிக்கையில் பெரும் பங்கு வகிப்பது மதுவிலக்கை மீறிய குற்றங்கள் தான். 1,38,237 பேர் சம்பந்தப்பட்ட 12,676 மதுவிலக்கு வழக்குகள் விசாரணைக்கு வந்தன; அவைகளில் 1,25,633 பேர் தண்டிக்கப்பட்டனர்.

விபசாரத் தடையின்கீழ் 481 பேர் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். மிருகங்களையும், பட்சிகளையும் வேட்டையாடியதாக 44 பேர் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர்.

அமைதிக்குப் பங்கம் ஏற்படும் வகையில் நடந்துகொண்டதாக 580 வழக்குகள் அந்த வருடத்தில் பதிவாயின. அவ்வழக்குகளில் மொத்தம் 2,592 பேர் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டதில் 604 பேர் மட்டுமே தண்டிக்கப்பட்டனர்.

பிரஸ்தாப வருஷத்தில் 5,916 மைனர் குழந்தைகள் தண்டிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களில் 5,383 பேர் சிறுவர்களும், 533 பேர் சிறுமிகளுமாவர்.

செஞ்சிக் கோட்டை மீது ஏறியவர்களெல்லாம் தேசிங்கு இராஜாக்களா?

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வதற்குத் தயங்குவானேன்? யாருக்காக இந்த சர்க்கார் பயப்படுகிறது? நிலப் பிரச்சினையைத் தீர்ப்பதில் தங்களுக்குள்ள பொறுப்பை தட்டிக் கழித்திருக்கிறார்கள் என்றே நான் குற்றம் சாட்டுகிறேன்.

அத்தைக்கு மீசை முளைத்துவிட்டதே!

"தொழில்துறை அபிவிருத்தியைப் பற்றி நாங்கள் கொண்டுள்ள கருத்து தெளிவானதுதான். ஆனால், இங்கு பேசிய அம்மையார் அவர்கள், 'அத்தைக்கு மீசை முளைத்தால் அல்லவா சித்தப்பா?' என்று கேட்டார்கள். அவர்களுக்குச் சொல்லுவேன்—'அத்தைக்கு மீசை முளைத்திருக்கிறது; 'சித்தப்பா' என்றும் கூப்பிடுகிறார்கள், அண்டையில் உள்ள கேரளத்தில்! இதனை அந்த அம்மையார் அறிதல் வேண்டும்.

அந்த எண்ணம் நெஞ்சில் ஏறட்டும்!

மேலும் ஆளும் கட்சியினருக்கு, எத்தினமும் எதிர்க்கட்சியினர் ஆளும் கட்சியாக மாறலாம் என்ற எண்ணம் நெஞ்சில் இருந்தாக வேண்டும்.

அவர்கள் எல்லோரும் தியாகிகள்தானா?

"செஞ்சிக் கோட்டைமீது ஏறியவர்கள் எல்லாம் தேசிங்கு ராஜாக்கள் அல்ல! அதேபோல, காங்கிரசில் இருப்பவர்கள் எல்லோரும் பெரும் தியாகிகள் அல்ல! இதனை மறந்து, எங்களை, 'இவர்கள் எல்லாம் ஏகாதிபத்திய தாசர்கள்' என்று பேசுவதானால், எங்களுடைய முகம் அல்ல—அந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற பலருடைய முகம் சுருங்குவதை நான் காண்கிறேன்.

"காங்கிரஸ்காரர்கள், தங்களின் பழம் பெருமையைப் பற்றிப் பேசிப் பயன் இல்லை; ஜமீன்தார்கள், சிற்றரசர்கள் காலம் வேகமாக ஓடி மறைந்துகொண்டிருக்கும் இந்த நாளில், அரசியலிலும் ஜமீன்தார் முறையைக் கையாள விரும்பினால் சீக்கிரமே அழிந்து முடிவு கட்டப்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

போராடலாமே!

"தொழில் துறையைப் பொறுத்து, நாங்கள் கூறுவதுபற்றிக்கூட ஆட்சியாளர் கவலை எடுத்துக்கொள்ள வேண்டாம். ஆனால், இப்படி ஒரு கூட்டம் இருப்பதாகச் சொல்லி மத்திய சர்க்காரிடம் தமிழ்நாட்டிற்கு நியாயம் கிடைப்பதற்காகப் போராடலாமே!

முன்னாள் அமைச்சர் சொன்னதென்ன?

"நமது நாட்டின் தொழில் வளர்ச்சி பற்றி டெல்லி சர்க்கார் எத்தகைய கருத்து கொண்டிருக்கிறார்கள் என்பதை, இந்த சபையில் உறுப்பினராயிருந்தவரும், சில காலம் மந்திரியாக இருந்தவருமான ரோச் விக்டோரியா அவர்கள் தமக்குக் கிடைத்த அனுபவத்தைச் சொல்லியிருப்பதின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

"அவர் சொல்லுகிறார்:—'இந்த மாநிலத்தில் என்ன செய்ய வேண்டும் — என்ன என்ன செய்யக்கூடாது என்பதை டெல்லி சர்க்கார்தான் நிர்ணயிக்கிறார்கள். நமது மாநில சர்க்கார், மத்திய சர்க்காரின் 'பாவாடை நாடா'வில் கட்டப்பட்டிருக்கிறது' என்று அவர் கூறியிருக்கிறார்.

நாங்கள் கூறுவது இதுதானே!

"நாங்கள் கூறுவதெல்லாம் அந்த 'நாடா'வைச் சற்று அவிழ்க்க வேண்டும் என்பதுதான்!

ஏற்றால் எனக்கல்ல—ஜனநாயகத்திற்கு!

"தங்களுக்குத் தரப்பட்ட நேரம் குறித்து உறுப்பினர்கள் பலரும், 'போதாது' என்று குறைபட்டுக் கொண்டார்கள். ஆனால், எத்தனை அனுபவம் பெற்றவர்களானாலும், சட்டசபையில் உறுப்பினர்கள் பலரும் தங்கள் கருத்துக்களை விரிவான அடிப்படையில் எடுத்துச் சொல்லமுடியாது. எனவே, ஒவ்வொருதுறை பற்றியும் விவாதம் நடக்கும் போது, ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் அத்துறைகளில் தேர்ச்சியுள்ளவர்களாகப் பொறுக்கி எடுத்து, ஆலோசனைக் குழு அமைத்தால் விவாதம் நன்கு நடைபெறமுடியும். ஆளும் கட்சியினர் இந்த யோசனையை ஏற்றுக் கொண்டால் நல்லது; எனக்கல்ல—ஜனநாயகத்திற்கு!

அடுக்குச் சொல் கூறி ஏமாற்ற முடியாதே!

"'வடக்கு வாழுகிறது-தெற்கு தேய்கிறது' என்று நாங்கள் கூறிடுவது, வெறும் அடுக்குச் சொல் அலங்காரம் அல்ல! அடுக்குச் சொல் அலங்காரத்தினாலேயே, அவர்கள் எத்தனைதான் திறமைசாலிகளாயிருந்தாலும் மக்களை ஏமாற்றிவிட முடியாது! 'தென்னாடு தேய்கிறது' என்ற கிளர்ச்சியை ஏற்படுத்திவிட முடியாது.

இந்த அலங்கோலத்தை என்னென்பது?

"இதனைக் கண்டுவிட்ட சிலர் 'அண்டா', 'குண்டா' என்று பொருத்தமில்லாமல் அடுக்குச் சொற்களைப் பிரயோகித்தனர். அடுக்குமொழி தவறாக உபயோகித்தால் எவ்வளவு அலங்கோலம் ஏற்படும் என்பதைக் காட்டுவதாக அது அமைந்தது!

இந்தப் பேதாபேதம் நியாயமானதுதானா?

"விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் வடநாட்டினர் வருமானம் எவ்வளவு? தென்னாட்டினர் வருமானம் எவ்வளவு?—என்பதை, சர்க்காரின் புள்ளி விவரங்களே கூறும்.

"வடநாட்டில் உள்ள விவசாயத் தொழிலாளரின் வருமானமும் சரி—அவர்களுக்குக் கிடைக்கும் நாட்களின் எண்ணிக்கையும் சரி, தென்னாட்டு விவசாயிகளுக்குக் கிடைப்பதைவிட அதிகமாக இருப்பதாக சர்க்கார் தரும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

"அதேபோல, தொழிலாளர்களின் சராசரி ஆண்டு வருமானம், வடநாட்டில் தென்னாட்டைவிட அதிகமாக இருக்கிறது. இந்தப் பேதாபேதங்களை அகற்ற வேண்டாமா?

பாதை அமைக்கிறோம்—அவ்வழி செல்லுங்கள்!

"இதற்கு நாங்கள் வேண்டுமானால், பட்டாளத்தில் இருக்கிற 'சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ்' என்ற பாதை அமைப்பவர்கள் இருப்பது போல், கள்ளி காளான்களை அகற்றுகிறோம்; நீங்கள் அந்த வழியே சென்று, தென்னாடு வளர வழி காணுங்கள்.

அதிகாரங்கள் மாற்றப் பயன்படுவோம்!

"தமிழ் நாடு தொழில் துறையில் வளர, மத்திய சர்க்காரிடம் குவிந்திருக்கிற அதிகாரங்களை மாகாண சர்க்காருக்கு மாற்ற எங்களைப் போன்றவர்களை சர்க்கார் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இத்தனை நாள் எங்கே மறைந்து கிடந்ததோ!

"மதுவிலக்குத் திட்டம் சமீபத்தில தீவிரமாக அமுல் செய்யப்பட்டு வருவதையும், ஏராளமான குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருவதையும் நான் பாராட்டுகிறேன். ஆனால் இத்தனை குற்றங்களும் இத்தனை நாளும் மறைந்து கிடந்ததே என்றுதான் என் பேதை நெஞ்சம் கேட்க விரும்புகிறது.

செலவிடும் பணத்திற்கு அர்த்தமிருக்க வேண்டும்

"சமுதாயநலத் திட்டங்களின் வெற்றி, அவை மக்களிடை தோற்றுவிக்கும் தன்னம்பிக்கையையும், கிராம மக்களுக்குத் தேடித்தரும் நல்வாழ்க்கையையும் பொறுத்ததாகும்.

"இந்தத் திட்டங்கள், இங்கு மட்டும் அமுலாகிவருகின்றன என்பதல்ல; அமெரிக்காவின் உதவியுடன் உலகில் இன்று சுமார் 45 நாடுகளில் இதுபோன்ற சமூகநலத் திட்டங்கள் அமுலாகிவருகிறகின்றன. அந்த நாடுகளில், இந்தத் திட்டங்கள் பெறும் வெற்றியைவிட அதிகமான வெற்றியை நாம் இங்கே பெறமுடியாவிட்டாலும், அவற்றிற்கு இணையான ஒரு வெற்றியையேனும் நாம் கண்டால்தான், இத்திட்டங்களுக்காக நாம் செலவிட்டுக்கொண்டிருக்கும் கோடிக்கணக்கான ரூபாய்க்கு அர்த்தமிருக்க முடியும்.

அமெரிக்க நிபுணர் தந்த எச்சரிக்கை

"இந்தத் திட்டங்களை அமுல் செய்வதில் சர்க்கார் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று, அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப்பட்ட பெர்னார்டு என்ற உதவி டைரக்டர் தந்துள்ள எச்சரிக்கையை, நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (இங்கு அண்ணா அவர்கள் அந்த நிபுணரின் எச்சரிக்கையைப் படித்துக் காட்டினார்கள்.)

"இதுவரை அந்தத் திட்டம் இந்த நாட்டில் எப்படி அமுல் செய்யப்பட்டு வந்திருக்கிறது என்பதையும் அந்த நிபுணர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

"இந்தத் திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளில் பலருக்கு, திட்டம் பற்றித் தெரியவில்லை; சிலருக்குத் திட்டத்தில் நம்பிக்கையே இல்லை. கிராம மக்களிடைப் பழகச் செல்லும் கிராம சேவகர்கள், அதிகாரிகள்போல நடந்து கொள்கிறார்கள்,"

என்று, அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்த ரீதியிலேயே இனியும் அமுலாகுமா?

"இதுபோன்றே, இனியும் எதிர்காலத்திலும் இந்தத் திட்டங்கள் இந்த ரீதியிலேயே அமுல் செய்யப்படமாட்டாது என்பதற்கு எனக்குள்ள ஒரே நம்பிக்கைதரும் அம்சம், இந்த இலாகா பொறுப்பினை நமது முதலமைச்சரே ஏற்றுக் கொண்டிருப்பதுதான். அவர், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற அக்கறை கொண்டவர்—செய்கிறார் என்பதினால் அல்ல—என்பதால் தான் நான் அவ்வாறு கூறுகிறேன்.

"சர்க்காரின் விவசாய உணவுத் திட்டங்கள் பற்றி அண்மையில், திட்டக் குழுத் துணைத் தலைவர் பலத்த கண்டனம் தெரிவித்திருப்பதை நான் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மக்களிடை அதிருப்தி வளருவது நல்லதல்ல!

"சர்க்கார் உணவுப் பிரச்சினையைக் கையாண்டு வரும் முறை பற்றி மக்களிடை பெரும் அதிருப்தி நிலவிவருகிறது. அந்த அதிருப்தி வளருவது நல்லதல்ல என்பதையும் சர்க்கார் உணர வேண்டும்."

தேம்ஸ் நதிக்கரையும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னார்கள். இன்று அந்தக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களே எதிர்க்கட்சியினரின் பேச்சுரிமையைப்பற்றி கூவம் நதிக்கரையிலிருந்து கூறுகின்றனர். இந்த ஏகாதிபத்திய மனப்போக்கு நாட்டின் ஜனநாயக வளர்ச்சிக்குப் பயன்படாது என்பதை உணரவேண்டும்."

கடலூர் ஓ.டி. 2-வதுவட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

9—5—57 இரவு 8-30மணிக்கு கடலூர் ஓ. டி. 2-வதுவட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் கழக இல்லத்தில் நடைபெறும்; உறுப்பினர்கள் வருகைதர வேண்டப்படுகிறார்கள்.

குடியரசுத் தலைவர் தேர்தல்

தி.மு.க., கா.சி.க., கம்யூனிஸ்டு, பிரஜா சோஷலிஸ்டு கட்சிகள் பங்குகொள்ளவில்லை

புதுடில்லி, மே 6—

இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு டில்லியிலும் மற்ற மாநிலங்களிலும் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் வாக்களிக்க உரிமையுள்ளவர்களின் எண்ணிக்கை 3,897 ஆகும்.

இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம், கா. சி. க., கம்யூனிஸ்டுக் கட்சி, பி. சோ. கட்சி ஆகியவைகள் கலந்து கொள்ளவில்லை.

மாநிலங்களில் பதிவான வாக்குப் பெட்டிகள் டில்லிக்கு அனுப்பப்படுகின்றன.

பதிவான வாக்குகள் வெள்ளியன்று எண்ணப்படும்.

குடியரசுத் தலைவர் பதவிக்கு இராசேந்திர பிரசாத், வழக்கறிஞர் அரிராம், நாகேந்திர நாராயணதாஸ் ஆகிய மூவர் போட்டியிட்டுள்ளனர்.

கழகக் கூட்டம்

★

சோபனபுரம்:
(திருச்சி மாவட்டம்)
9—5—57 அன்று
பேசுவோர்:
என். வி. நடராசன்
மு. பே. முத்துக்கருப்பன்

கடலூர் அகில இந்திய கைத்தறி வார விழாவில் பொதுச்செயலாளர்

9—5—57 மாலை 6-30மணிக்கு கடலூர்—டவுன் ஹாலில் கைத்தறி வாரக் குழுவினர் சார்பில், கடலூர்—தெ. ஆ. மாவட்ட மத்திய கூட்டுறவு பாங்கு டைரக்டர் திரு. எம். பச்சையப்ப முதலியார் தலைமையில் மேற்படி விழா நடைபெறும்; அதுபோது, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேருரையாற்றுவார்.

உதயசூரியன் அறிவியல் மன்றம் திறப்புவிழா

7—5—57 இரவு 9-மணிக்கு, சென்னை சிங்காரத் தோட்டம் 4-வது சந்தில் தோழர் டி. பி. சுந்தரம் தலைமையில், மேற்படி மன்றத் திறப்புவிழா நடைபெறும்; தோழர் காஞ்சி—கல்யாணசுந்தரம் அவர்கள் மன்றத்தை திறந்து வைத்து சொற்பொழிவாற்றுவார்.

தோழர் கே. எஸ். பாண்டியன் வில்லுப் பாட்டுக் குழுவினரால் 'அறிஞர் அண்ணா' சரிதம் சொல்லப்படும்.

அணைக்கரை

'நம் நாடு' விற்பனையாளர்

சா. இராமகிருட்டினன்
'நம் நாடு' விற்பனையாளர்
அணைக்கரை
(வழி) கும்பகோணம்

சென்னை மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

4-வது அகில இந்தியக் கைத்தறி வார விழா

34, பார்த்தியான் ரோடு, எழும்பூர், சென்னை-8.

பொதுமக்களுக்கு தினந்தோறும் மாலை 4மணிக்கு திறந்துவைக்கப்படும்

8—5—1957 : மாணவர் தினம்

மாலை 4-30 மணி: குழந்தைகள் விளையாட்டு
மாலை 6-மணி: பொதுக்கூட்டம்

தலைவர்:
திரு. ஆர். வெங்கட்ராமன் எம்.ஏ., பி.எல்., கூட்டுறவு அமைச்சர்
பேசுவோர்: திரு. அ. ச. ஞானசம்பந்தம் எம்.ஏ., எல்.டி.
திரு. கே. ஏ. மதியழகன் எம்.ஏ.
அகில இந்திய கைத்தறி போர்ட் காரியதரிசி
திரு. என். டி. சுந்தரவடிவேலு எம்.ஏ., எல்.டி.
டைரக்டர், பொதுகல்வித்துறை—பரிசுகள் வழங்குவார்.

இரவு 7 மணி: **நாடகம்: 'கிராமராஜ்யம்'**
—கலாவிலாசினி நாடகக் குழுவினர்

பிரவேசக் கட்டணம் கிடையாது

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.